# இலங்கை வங்கி

**தீவளாவிய கிளை வலையமைப்பையும் இலண்டன் மாநகரில் உள்ள வங்கித் துணை நிறுவனம் உட்பட வலுவான வெளிநாட்டுக் கிளை வலையமைப்பையும் கொண்டு நாட்டின் ஆகப்பெரிய வங்கி வலையமைப்பாகத் திகழும் இலங்கை வங்கி உலகின் அதிசிறந்த 1000 வங்கிகளுள் ஒன்றாகத் தரப்படுத்தப்பட்ட ஒரேயொரு இலங்கை வங்கி என்ற பெருமையையும் நாட்டின் 1ஆம் தர வங்கி என்ற பெருமையையும் கொண்டுள்ளது.**

***நாம் பின்வரும் பதவிக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்குப் பொருத்தமான நபர்களை எதிர்பார்க்கின்றோம்:***

## பாதுகாப்பு உதவியாளர் (ஆண்/பெண்)
## (ஒப்பந்த அடிப்படையில்)

### தகுதிப்பிரமாணங்கள்

- இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.
- க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் ஒரே அமர்வில் ஐந்து பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- இலங்கை இராணுவத்தில் லாண்ஸ் கோப்ரல் தரத்தினர் (Lance Corporal) / இலங்கை கடற்படையில் ஏபல் சீமன் (Able Seamen) / இலங்கை விமானப்படையில் பிரதான விமான வீரர் (Leading Aircraftman) / இலங்கை பொலிஸில் கான்ஸ்டபிள் (Constable) அல்லது அதைவிட உயர் பதவிகள் (ஆரம்ப இடைக்கால இராணுவ தகைமையுடன்)
- ஆயுதப்படைகளில் அல்லது பொலிஸில் குறைந்தது தொடர்ச்சியாக ஐந்து (05) ஆண்டுகள் சேவையாற்றிய அனுபவத்தைக் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் முறையாக சேவையில் இருந்து விலகியிருத்தல் வேண்டும். அத்துடன், ஏதேனும் வணிக வங்கியொன்றில் பாதுகாப்பு உதவியாளராக / பாதுகாப்பு உத்தியோகத்தராக ஓராண்டுக்கு மேல் பணியாற்றிய அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- இலகுரக வாகனங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றுக்கான செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம் இருத்தல் வேண்டும்.
- உயரம் - ஆண் விண்ணப்பதாரர்கள் - 05 அடி 4 அங்குலம் அல்லது அதற்கு மேல்<br>பெண் விண்ணப்பதாரர்கள் - 05 அடி 2 அங்குலம் அல்லது அதற்கு மேல்
- விண்ணப்ப முடிவுத் திகதியில் 35 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

### ஏனைய விருப்புக்குரிய தகைமைகள்

- தீ அணைப்பு, குண்டு செயலிழக்கச் செய்தல், தற் பாதுகாப்புக் கலை, நவீன பாதுகாப்புக் கருவிப் பிரயோகம் ஆகியவற்றில் ஆற்றல்.
- விளையாட்டுத்துறையில் / தடகளத்துறையில் ஈடுபாடு.
- ஆங்கிலமொழி அறிவும் சிறந்த தொடர்பாடற் திறன்களும்

### விதிகள் மற்றும் நிபந்தனைகள்

- இப்பதவி இரண்டு (02) ஆண்டுகளுக்கான ஒப்பந்த அடிப்படையிலானதாகும்.
- இரண்டு (02) வருட ஒப்பந்தக் காலத்தை வெற்றிகரமாக முடித்த பிறகு, பொருத்தமான விண்ணப்பதாரர் வங்கியின் நிரந்தர ஆளணியில் உள்வாங்கப்படுவதற்குப் பரிசீலிக்கப்படுவார்கள்.
- ஒப்பந்த காலத்தில் மாதாந்த கொடுப்பனவாக முதலாமாண்டில் 42,000 ரூபாயும் இரண்டாமாண்டில் 52,000 ரூபாயும் சம்பளமாக வழங்கப்படும்.
- வங்கியின் தேவைக்கேற்ப நாட்டின் எந்தவொரு பாகத்திலும் பணியாற்றக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- வார இறுதி / விடுமுறை நாட்களிலும் கடமை நேரத்துக்குப் பின்பும் வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

### தெரிவு நடைமுறை

மேற்கூறிய தகுதிப் பிரமாணங்களின் அடிப்படையில் பட்டியற்படுத்தப்படும் விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சை மூலமும் அதனைத் தொடர்ந்து மருத்துவ மற்றும் உடற்றகுதி சோதனைகள் மூலமும் தெரிவு செய்யப்படுவர்.

### விண்ணப்பிக்கும் முறை

www.boc.lk என்ற எமது இணையத்தளத்தில் Careers என்ற பகுதியின் கீழ் தரவிறக்கிக்கொள்ளக்கூடிய மாதிரி விண்ணப்பப் படிவத்தைப் பயன்படுத்தி உங்களது சுயவிபரக் கோவையினைத் தயாரித்து அதனை பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், தொடர்புடைய கல்வித் தகைமைச் சான்றிதழ்கள் மற்றும் தற்போது வகிக்கும் தரத்தையும் அனுபவத்தையும் நிரூபிப்பதற்கான சான்றிதழ் / ஆவணச் சான்று, சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டமையை உறுதிப்படுத்தும் சான்றிதழ் / ஆவணச் சான்று, விண்ணப்பதாரி தற்போதும் சேவையில் இருந்தால் அவர் குறித்த சேவையிலிருந்து விடுவிக்கப்படுவார் என்பதை உறுதிப்படுத்தி அவரின் மேலதிகாரியிடமிருந்து பெற்றுக்கொண்ட கடிதம் என்பவற்றின் நிழற்பிரதியுடன் இணைத்து **2025 வைகாசி 03ஆம் திகதியில் அல்லது அதற்கு முன்னர்** கிடைக்கும் வகையில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடவும்.

விண்ணப்ப முடிவுத் திகதிக்குள் மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டிராத அல்லது தேவையான சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்பப்படாத அல்லது தவறான தகவல்களைக் கொண்ட அல்லது விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்பு கிடைக்கும் எந்தவொரு விண்ணப்பமும் ஆட்சேர்ப்பின் எந்தவொரு கட்டத்திலும் மேலதிக அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

வங்கியின் வலைத்தளத்தின் "மனிதவள முகாமைத்துவ" பக்கத்தில் (https://www.boc.lk/hr-management) உள்ள "ஆட்சேர்ப்புக்கான தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு அறிவித்தல்" பகுதியை வாசித்து பதவிக்கு விண்ணப்பிக்கும் போது அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (ஆட்சேர்ப்பும் தொழில் அபிவிருத்தியும்)**
**இலங்கை வங்கி**
**26ஆவது மாடி, தலைமை அலுவலகம்,**
**"இலங்கை வங்கிச் சதுக்கம்"**
**இல. 01, இலங்கை வங்கி மாவத்தை,**
**கொழும்பு 01.**

- தேர்வு சம்பந்தமான ஆதரவுகளை நாடுவோர் தகைமையை இழப்பர்.
- தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளை மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.
- நிரப்பப்படவுள்ள பதவிகளின் எண்ணிக்கை தொடர்பில் தீர்மானிக்கும் அல்லது ஆட்சேர்ப்பைப் பிற்போடும்/ இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.
- வங்கியானது அதன் தனிநபர் தரவுப் பாதுகாப்புக் கொள்கைக்கு இணங்க உங்கள் தகவல்களின் தனியுரிமையையும் இரகசியத்தன்மையையும் பாதுகாக்கிறது.

1975 BOC CALL CENTRE
www.boc.lk
AA-(lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம்,
இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்